**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.148/2024**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜோதிமணி | தொழில் | : தனியார் வேலை |
| தகப்பனார் பெயர் | : வேலுச்சாமி | கணவர் பெயர் | : |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 68 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 12.09.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், E.B ஆபிஸ் எதிர்புறம், தாராபுரம் ரோடு, V.O.C.நகர் கதவு எண்.9சி/6–2 என்ற விலாசத்தில் வசித்து வரும் வேலுச்சாமி மகன் சுமார் 68 வயதுள்ள ஜோதிமணி ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 15.06.2020 | அ.வ.எண்.803/2022 (பழனி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.194/2020) வழக்கின் வழக்குரை – நீதிமன்ற நகல் | வா.சா.ஆ.1 |

| | | | |
|---|---|---|---|
| 02 | 13.12.2021 | அ.வ.எண்.194/2020 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை | வா.சா.ஆ.2 |
| 03 | 04.10.2023 | அ.வ.எண்.803/2022 வழக்கின் SOC Memo நீதிமன்ற நகல் | வா.சா.ஆ.3 |
| 04 | 04.10.2023 | அ.வ.எண்.803/2022 வழக்கின் தீர்ப்புரை, தீர்ப்பாணை – நீதிமன்ற நகல் | வா.சா.ஆ.4 |
| 05 | 24.01.2024 | வாதி அனுப்பிய அறிவிப்புகள் (5 எண்ணிக்கைகள்) –அலுவலக நகல் | வா.சா.ஆ.5 |
| 06 | 22.01.2020 | ஒட்டன்சத்திரம் கார்பரேசன் வங்கி முதுநிலை மேலாளர் இவ்வழக்கு வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு – நீதிமன்ற நகல் | வா.சா.ஆ.6 |
| 07 | 09.01.2024 | 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த ஏலச்சான்று – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.7 |
| 08 | 07.05.2024 | 01.01.2015 முதல் 05.05.2024 வரை சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் – கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.8 |
| 09 | 28.06.2013 | இவ்வழக்கு வாதிக்கு முருகானந்தம் என்பவர் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.9 |
| 10 | 01.09.2016 | இவ்வழக்கு வாதி கார்பரேசன் வங்கிக்கு ஏற்படுத்திக் கொடுத்த அடமானக் கடன் பத்திரம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.10 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1–ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் கண்டுள்ள விலசாத்தில் நான் எவ்வளவு நாட்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் ? 27 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். 1–ம் பிரதிவாதி வங்கியில் எப்போது இருந்து எனக்கு கணக்கு உள்ளது என்றால் ?

கடந்த 2016ம் ஆண்டு முதல் கணக்கு உள்ளது. கடந்த 2016–ம் ஆண்டு முதல் நான் தொடர்ந்து வங்கியில் வரவு செலவு செய்து வருகிறேன் என்றால் ? சரிதான். கடந்த 2016–ம் ஆண்டு நான் வங்கியில் கடன் பெறுவதற்கு முன்பாக வங்கி நிர்வாகம் எனக்கு சேவை குறைபாடு எதுவும் வைக்கவில்லை என்றால் ? சரிதான். சேவை குறைபாடு சம்மந்தமாக நான் வங்கி நிர்வாகத்தின் மீது எந்தவித புகாரும் கொடுத்ததில்லை என்றால் ? ஆமாம். கொடுத்ததில்லை. நான் கடந்த 28.06.2013ம் தேதி சொத்தினை வா.சா.ஆ–9 ஆவணத்தின் வழியாக கிரையம் பெற்றதால் தான் சொத்து எனக்கு கிரைய வழியில் பாத்தியம் என்றால் ? சரிதான். கடந்த 08.09.2016–ம் தேதி நான் 1–ம் பிரதிவாதி வங்கியில் கடன் பெற்றேன் என்றால் ? ஆமாம். வா.சா.ஆ–9 ஆவணத்தின் அசல் ஆவணமான நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை வங்கி வசம் ஒப்படைத்தேன் என்றால் ? சரிதான். ஒப்படைத்துள்ளேன். நான் வா.சா.ஆ–9 ஆவணத்தின் வழியாக கிரையம் பெற்ற சொத்தை வா.சா.ஆ.10 ஆவணத்தின் வழியாக கடந்த 01.09.2016ம் தேதி கார்பரேசன் வங்கிக்கு ஒரு அடமான பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தேன் என்றால் ? சரிதான். நான் கிரையம் பெற்ற கிரைய பத்திரம், வங்கிக்கு அடமானம் ஏற்படுத்திக் கொடுத்த பத்திரம் ஆகியவைகள் இவ்வழக்கு 1–ம் பிரதிவாதி வங்கி வசம் தான் இருந்தது என்றால் ? சரிதான். நான் வங்கிக்கு அடமானம் ஏற்படுத்திய போது தொகை ரூ.4,00,000 கடன் பெற்றதாக சரத்து கண்டு தான் அடமான பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் ? சரிதான். வங்கி நிர்வாகம் எனக்கு தொகை ரூ.4,00,000 கடன் பெறுவதற்கு அனுமதி வழங்கினார்கள் என்றால் ? சரிதான். கடந்த 08.09.2016–ம் தேதி வங்கி நிர்வாகம் கடன் அனுமதித்த வகையில் தொகை ரூ.4,00,000 எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது என்றால் ? சரிதான். அந்த தொகை நான் வங்கி நிர்வாகத்திடம் இருந்து பெற்றுக் கொண்டேன் என்றால் ? நான் தொகையை ஒரே தவணையில் பெறவில்லை. தொகை எனது வங்கி கணக்கிற்கு வந்தவுடன், வியாபாரத்திற்கு ஏற்ப நான் தொகையினை அவ்வப்போது எடுத்தேன். வங்கி நிர்வாகம் ஆனது

கடன் தொகை எனக்கு அனுமதிக்கப்பட்டு எனது கடன் கணக்கில் இருந்து நான் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் நடப்பு கணக்கிற்கு தொகை மாறுதல் செய்யப்பட்டவுடன் எனது தேவைக்கு ஏற்ப நான் பணத்தினை நடப்பு கணக்கில் இருந்து எடுத்துக் கொண்டேன் என்றால் ? சரிதான். கடன் ஆவணங்களை வங்கி நிர்வாகத்திற்கு தொகை ரூ.4,00,000 த்திற்கு தான் எழுதிக் கொடுத்தேன் என்றால் ? ஆமாம். கடன் கணக்கு சம்மந்தமாக வங்கி நிர்வாகம் எனக்கு பாஸ் புத்தகம் வழங்கியிருந்தார்கள் என்றால் ? சரிதான். அவ்வாறு வங்கி நிர்வாகம் எனக்கு கொடுத்த வங்கி பாஸ்புத்தகத்தை பார்த்தால் எவ்வளவு தொகை நான் நடப்பு கணக்கில் இருந்து எடுத்தேன் என்று தெரியும் என்றால் ? தெரியாது. பணம் எடுத்தது தெரியும். வங்கி நிர்வாகத்திற்கு நான் பணம் செலுத்தியுள்ளது தெரியவில்லை. நான் வங்கிக்கு தொகை ரூ.17,000 மற்றும் ரூ.17,000க்கு அதிகமாக சற்று தொகை செலுத்தியுள்ளேன். அந்த பணம் நான் செலுத்தியதை வங்கிநிர்வாகம் எனது கணக்கில் வரவு வைக்கவில்லை. தொகை ரூ.17,000க்கு மேல் வங்கியில் நான் செலுத்திய தொகைக்கு ரசீது எனது வீட்டில் உள்ளது. வங்கிக்கு தொகை ரூ.17,000க்கு மேல் செலுத்தியுள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் அந்த ரசீதினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? தாக்கல் செய்யவில்லை. அந்த ரசீதை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் ? ஆமாம். முடியும். தொகை ரூ.17,000 வங்கி கணக்கில் நான் செலுத்தியதற்கு அடிக்கட்டை ரசீது எனது வசம் உள்ள நிலையில் அந்த தொகையினை வங்கி நிர்வாகம் எனது கணக்கில் வரவு வைக்கப்படாதது குறித்து நான் வங்கி நிர்வாகத்தை அணுகி கேட்டேனா என்றால் ? கேட்டேன். எழுத்து வழியாக தொகை வரவு வைக்கவில்லை என்று கேட்டேனா என்றால் ? எழுத்து வழியாக கேட்கவில்லை. நான் தினந்தோறும் வங்கிக்கு செல்வதால் நேரடியாக கேட்டேன். நான் நீதிமன்ற சாட்சியத்தில் தொகை ரூ.4,00,000 கடன் பெற்றதாக சொல்லியுள்ள நிலையில், நான் தாக்கல் செய்துள்ள தாவாவிலும், முதன்மை சாட்சிய நிருபண பிரமாண பத்திரிக்கையிலும் தொகை ரூ.3,70,000

கடன் பெற்றதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ? சரியல்ல. ரூ.30,000 தொகையினை வங்கி நிர்வாகம் ஸ்டாம்பிற்காகவும், விண்ணப்பத்திற்காகவும் எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம். தொகை ரூ.4,00,000 கடன் பெற்றுள்ள நிலையில் அதற்காக நான் வட்டி செலுத்த வேண்டும் என்றால் ? சரிதான் செலுத்த வேண்டும். தொகை ரூ.4,00,000 கடன் பெற்றுள்ள நிலையில் எவ்வளவு தொகை நான் வங்கி நிர்வாகத்திற்கு செலுத்தியுள்ளேன் என்றால் ? தொகை ரூ.1,67,000 நான் வங்கிக்கு செலுத்தியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதி மற்றும் இந்நீதிமன்ற சாட்சியத்தில் தொகை ரூ.1,86,000 வங்கிக்கு தொகை செலுத்தியதாக நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ? சரிதான். மீதம் பாக்கி தொகை ரூ.1,84,000 வங்கிக்கு செலுத்த வேண்டும் என்று நான் வழக்குரை சங்கதிகளிலும், இந்நீதிமன்ற முதன்மை சாட்சியத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் ? சரியல்ல. நான் அவ்வாறு சொல்லவில்லை. வழக்குரை சங்கதிகளில் தொகை ரூ.1,84,000 கட்ட வேண்டும் என்று சொல்லியுள்ள நிலையில் நான் அவ்வாறு சொல்லவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் வழக்குரை சங்கதிகளில் செலுத்த வேண்டிய அசல் தொகையை மட்டும் சொல்லியுள்ளேன் என்றாலும், வட்டி தொகையை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் ? சரிதான். சொல்லவில்லை. நான் வழக்குரையில் சொல்லியுள்ள தொகையினை விட செலுத்த வேண்டியதொகை அதிகமாக உள்ள நிலையில் நான் வங்கி நிர்வாகத்திற்கு அதிகமாக தொகை செலுத்த வேண்டி பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. வங்கி நிர்வாகம் தொகையினை பலமுறை கேட்டும் செலுத்தாத காரணத்தினால் தான் வங்கி நிர்வாகம் அடமான சொத்தின் மீது நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் ? சரிதான். வங்கி நிர்வாகம் என்னை அணுகி நான் பெற்ற கடனை திருப்பி செலுத்தும்படி பலமுறை கேட்டும் திருப்பி செலுத்தாத காரணத்தினால் தான் பழனி சார்பு நீதிமன்றத்தில் வங்கி நிர்வாகம்

அ.வ.எண்.194/2020 என்ற அசல் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் ? வழக்கு போட்டார்கள். நான் அந்த நேரத்தில் பணத்தை வங்கிக்கு செலுத்தி கொண்டு தான் இருந்தேன். அ.வ.எண்.194/2020 என்ற வழக்கானது பழனி சார்பு நீதிமன்றத்திற்கு வந்து ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்திற்கு வழக்கு ஆள்வரையறை எல்கையின் காரணமாக இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.803/2022 என்ற வழக்கில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் ? ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் கடந்த 2017ம் வருடம் எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கோவை ராயல் கேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருதய அறுவை சிகிச்சை செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் ? சரிதான். மருத்துவ சிகிச்சை சம்மந்தமான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். அந்த சமயத்தில் தான் வங்கி நிர்வாகமானது சொத்தினை ஏலத்திற்கு விட்டு ஏல நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. சொத்தினை ஏலத்திற்கு விடுவது சம்மந்தமாக ஏல நடவடிக்கை மேற்கொண்ட போது வங்கி நிர்வாகம் எனக்கு கேட்பு அறிவிப்பு மற்றும் சுவாதீன அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் ? எனக்கு அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை. அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்ட பிறகு பணம் செலுத்தவில்லை என்றால் ? சரியல்ல. நான் அறிவிப்பை பெறாத காரணத்தினால் பணத்தினை செலுத்தவில்லை. வங்கி நிர்வாகம் எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பை தவிர தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டபிறகு வங்கி நிர்வாகம் சொத்தினை பொறுத்து ஏல நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்றால் ? சரியல்ல. வங்கி நிர்வாகம் ஏல அறிவிப்பினை தபால் வழியாகவும், நாளிதழ் வழியாகவும் விளம்பரம் பிரசுத்தார்கள் என்றால் ? சரியல்ல. அந்த அறிவிப்பின் வழியாக தான் 2–ம் பிரதிவாதி ஏல நடவடிக்கைகளில் பங்கெடுத்துள்ளார் என்றால் ? சரியல்ல. 2–ம் பிரதிவாதி சொத்தினை அதிகப்படியான தொகைக்கு ஏலம் எடுத்த காரணத்தினால் தான்

சொத்தினை 2−ம் பிரதிவாதிக்கு ஏலத்திற்கு வங்கி நிர்வாகம் விட்டுவிட்டார்கள் என்றால் ? சரியல்ல. 2−ம் பிரதிவாதி சொத்தினை ஏலம் எடுத்துள்ள நிலையில் தொகையினை வங்கி செலுத்திவிட்டார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. ஏலத்தினை வங்கி நிர்வாகம் கடன் கணக்கில் வரவு வைத்துவிட்டார்கள் ? அது பற்றி எனக்கு தெரியாது. ஏலத் தொகையை வரவு வைத்த காரணத்தினால் ஏலச் சான்றும், 1−ம் பிரதிவாதி, 2−ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் ? சரியல்ல. ஏலச் சான்றினை 2−ம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. ஏலச்சான்று பதிவு செய்த பிறகு அதன் காரணமாக தான் வங்கி நிர்வாகம் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.803/2022 வழக்கினை நீதிமன்றத்திற்கு வெளியில் செட்டில் ஆகிவிட்டதாக SOC குறிப்பாணை தாக்கல் செய்து பதிவு செய்தார்கள் என்றால் ? சரியல்ல. சர்பாசி சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எனக்கு தெரியும் என்றால் ? எனக்கு தெரியாது. வழக்கிற்காக வேண்டி எனக்கு தெரியாது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. வழக்கை சமாதானமாக போகலாம் என்று சொல்லி வந்தார்கள். பின்னிட்டு வேறுமாதிரி வங்கி நிர்வாகம் நடந்து கொண்டார்கள். 1−ம் பிரதிவாதி சொத்தினை பொறுத்து எடுத்துள்ள நடவடிக்கைக்கு எதிராக கடன் தீர்ப்பாயத்தில் தான் நான் முறையீடு செய்ய வேண்டும் என்றால் ? சரியல்ல. இந்த வழக்கை நான் தாக்கல் செய்த பிறகு 1−ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கடன் தீர்ப்பாயத்தை நான் அனுக வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள் என்றாலும், அது பற்றி எனக்கு தெரியுமா என்றாலும் ? அது பற்றி எனக்கு தெரியாது. 1−ம் பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்கிறார் என்பதை நான் எனது வழக்குரைஞரின் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் ? எனக்கு தற்போது தான் அனைத்தும் தெரிந்து கொண்டேன். ஏற்கனவே நான் தெரிந்து கொள்ளவில்லை. இவ்வழக்கைநான் வழக்குரைஞர் வழியாக தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? ஆமாம். வழக்கின் விபரங்களை நான் எனது

வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ? தெரிந்து கொண்டேன். வழக்கின் விபரங்கள் எனக்கு தெரிந்திருந்தும், நான் கடன் தீர்ப்பாயத்தை நாளது வரை அணுகவில்லை என்றால் ? அணுகவில்லை. சாட்சி மீண்டும் அது பற்றி எனக்கு தெரியாது என்று பதில் அளித்தார். ஏல நடவடிக்கை வழியாக வங்கி நிர்வாகம் சொத்தினை ஏலம் விட்டுள்ள நிலையில் ஏலச்சான்றிதழை ரத்து செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எவ்விதமான வழக்குமூலமும் இல்லை என்று சொன்னால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு 1–ம் பிரதிவாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.09.12 19:46:48 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்